யூனியன் கேட்க வேண்டுமென்று இருந்தது. இப்பொழுது ஆறு ஆண்டுக் காலத்தில் குடிநீர்த் தேவைகளை ஆங்காங்கு நிறைவு செய்ய அரசு எடுத்துள்ள முயற்சியின் காரணமாக, பஞ்சாயத்து யூனியன்களும் கேட்க வேண்டும், அப்படிக் கேட்காவிட்டாலும் பரவாயில்லை, குடிநீர், வடிகால் வசதி வாரியத்தின் சார்பாக அந்தத் திட்டம் துவங்கப்படும்.

*வினா 177. திரு. பெ. சௌந்தரபாண்டியன்: மாண்புமிகு முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தொட்டியம் நகரத்திற்குக் குடிநீர் வழங்கும் திட்டத்திற்காக காவிரி ஆற்றில் ஊறு தோண்டப்பட்டு பரிசிலனை மேற்கொள்ளப்பட்டதா?

(இ) ஆம் எனில், எப்போது? அது தற்போது எந்த நிலையில் உள்ளது?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: (அ) ஆம். தொட்டியம் பேரூராட்சி குடிநீர் திட்டத்திற்கான ஆய்வு வேலைகள் 23-6-1972ல் துவங்கப்பட்டுள்ளது. ஆய்வு வேலைகள் 1973 மார்ச்சு கடைசியில் முடிவடையும்.

(இ) கிராமக் குடிநீர் திட்டத்தின்கீழ் தற்பொழுது இவ்வூராட்சிக்குத் தண்ணீர் விநியோகம் செய்யப்படுகிறது.

திரு. சி. க. வடிவேலு: தலைவரவர்களே, அதனுடைய மதிப்பீடு எவ்வளவு? அந்தத் திட்டம் எப்பொழுது செயலுக்கு வரும் என்பதை அறிவிப்பார்களா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: ஆய்வு வேலைகள் மார்ச்சு திங்களில் முடிவுறும். முடிந்தபிறகு மதிப்பீடு எவ்வளவு என்று தெரிவிக்கப்படும்.

திரு. நா. வீராசாமி: தலைவரவர்களே, இப்படி 6 ஆண்டுக் காலத்தில் எல்லாக் கிராமங்களிலும் குடிநீர் வசதி செய்ய 40 கோடி ரூபாய் அளவில் அரசு திட்டம் தீட்டியிருக்கிறது. இந்தியாவிலே இப்படி செய்ய மத்திய சர்க்காரும் பணம் ஒதுக்கியிருக்கிறது அப்படி ஒதுக்கப்பட்ட பணத்திலிருந்து மத்திய அரசிடமிருந்து பெறுவதற்கு அரசாங்கம் முயற்சியெடுக்குமா?

1973 பிப்ரவரி 28]

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : அரசின் மூலமும் எல்.ஐ.சி. மூலம் பெறும் கடன்களின் வாயிலாகவும் இத் திட்டத்தைச் செய்ய முடிவு செய்யப்பட்டிருக்கிறது. மத்திய அரசின் உதவியும் கோரப்படும்.

திருமதி த. ந. அனந்தநாயகி : சார், 'டிரிங்கிங் வாட்டர் சப்ளை ஸ்கிம்”-க்காக மத்திய சர்க்கார் கோடிக்கணக்கான ரூபாய் ஒதுக்கியிருக்கிறது. அதில் எவ்வளவு கோடி ரூபாய்களைத் தமிழக அரசு பெற்றிருக்கிறது ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மத்திய அரசு குடிநீர்த் திட்டத்திற்காக எவ்வளவு செலவழிக்கிறது என்பதை அம்மையார் புரிந்துகொள்ள வேண்டுமானால் தனிக் கேள்வி போட்டால் விவரம் அறியலாம்.

Pamban Road Bridge.

* 185 *Q.*—DR. H.V. HANDE :

THIRU K.T.K. THANGAMANI : Will the Hon. the Minister for Public Works be pleased to state :

(*a*) whether the Government have any proposal to take up Pamban Road bridge work; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : ஆம். இப்பணி நான்காவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் தேசிய நெடுஞ்சாலைத் திட்டத்தின்கீழ் இது அமுலாக்கப்படும். தேசிய நெடுஞ்சாலை எண். (49-ல் (மதுரை-தனுஷ்கோடி சாலை) இப்பாலம் இராமேஸ்வரம் தீவையும் மண்டபத்தையும் இணைக்கும் வகையில் இருக்கும். இத்திட்டத்திற்கான ரூ. 532.87 லட்சம் மதிப்பீட்டுப் பட்டியலுக்கு மத்திய அரசு ஒப்புதல் அளித்து இருக்கிறது.

திருமதி த. ந. அனந்தநாயகி : சார், இங்கே போடப்படும் பாலத்தின் காரணமாக மறவர் பகுதிகள் இருக்கும் ரோடுகளை எடுப்பதாகக் குறை சொல்லுகிறார்களே, அதை அரசு கவனித்திருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலைவரவர்களே, அப்படியொரு,

representation was made by some people in the locality that they will be affected by the alignment of the road. There is no other way and the technical advice is that we have to take it up.